ஸ்ரீ

# ஆன்ம வித்தை

## பல்லவி

மிகவுமே எளிமையானது, (தன்னை அறியும்) ஆத்ம வித்தை ஐயே! அது மிக எளிமையானது.

## அநுபல்லவி

சாமானிய அறிவுடையவருக்கும், உள்ளங்கையில் உள்ள நெல்லிக் கனியும் பொய்யாகும்படி அதைவிட எளிதாய் கண்கண்ட உண்மையாக உள்ளது ஆன்ம சொரூபம். (எனவே, ஆன்ம வித்தை ஐயே! அதி சுலபம்!)

## சரணங்கள்

1. எப்போதும் நிரந்தரமாக உண்மைப் பொருளாக தான் இருந்தும்; பொய்யான உடலும், உலகமும் உண்மைபோல் தன்னில் இருந்து முளைத்து எழும். அந்தப் பொய்யான நினைவை ஒடுக்கிட, உண்மைப் பொருள் இதய வெளியில் தானே ஆன்மாவாக ஒளிவீசும். அஞ்ஞான இருள் அடங்கி, துன்பம் நீங்கி இன்பம் பெருகும். (ஐயே! ஆன்ம வித்தை அதி சுலபம்)

2. மாமிச வடிவமாகிய இந்த 'உடலே நான்' எனும் எண்ணம், மற்ற பலவித எண்ணங்களாகிய மாலையில் கோர்க்கப்பட்ட நூலைப் போன்றது. ஆகையால் நான் யார்? அது உதிக்கும் இடம் எது? என்று உள்ளே விசாரித்தால் எண்ணங்கள் அழிந்துபோய் 'நான்-நான்' என்று இதயக் குகையில் தானாக திகழ்வது, ஆன்ம ஞானமாம் மோனம் ஆகும் என்று அறியலாம். அந்த இடமே ஞானாகாசமும் ஆனந்தத்தின் இருப்பிடமுமாகும். (ஐயே! ஆன்ம வித்தை அதி சுலபம்)

ஸ்ரீ

# ஆன்மவித்தை

## பல்லவி

ஐயே! யதிசுலபம் — ஆன்மவித்தை
ஐயே! யதிசுலபம்.

## அநுபல்லவி

நொய்யார் தமக்குமுளங் கையா மலகக்கனி
பொய்யா யொழியமிகு மெய்யா யுளதான்மா. *(ஐயே)*

## சரணங்கள்

மெய்யாய் நிரந்தரந்தா னையா திருந்திடவும்
பொய்யா முடம்புலக மெய்யா முளைத்தெழும்பொய்
மையார் நினைவணுவு முய்யா தொடுக்கிடவே
மெய்யா ரிதயவெளி வெய்யோன் சுயமான்மா —
விளங்குமே; இரு ளடங்குமே; இட ரொடுங்குமே;
இன்பம் பொங்குமே. *(ஐயே)* 1

ஊனா ருடலிதுவே நானா மெனுநினைவே
நானா நினைவுகள்சே ரோர்நா ரெனுமதனா
னானா ரிடமெதென்றுட் போனா னினைவுகள்போய்
நானா னெனக்குகையுட் டானாய்த் திகழுமான்ம —
ஞானமே; இதுவே மோனமே; ஏக வானமே;
இன்பத் தானமே. *(ஐயே)* 2

3. தனது உண்மை சொரூபத்தை விட்டு, மற்றவற்றை அறிவதால் பயன் என்ன? தன் ஆத்ம சொரூபத்தை உணர்ந்துவிட்டால் பிறகு அறிவதற்கு என்ன இருக்கிறது? பலவித உயிரினங்களில் பிரியாது ஒன்றாய் விளங்கும் சொரூபத்தை உணர்ந்தால் அதுவே தன்னுள் விளங்கும் ஆன்ம பிரகாசம் என்பது விளங்கும். அதுவே அருள் விலாசம் ஆகும். அகந்தையை அழிக்கும், இன்பத்தின் மலர்ச்சியுமாகும்.

தன்னை யறிதலின்றிப் பின்னை யெதறிகிலென்
றன்னை யறிந்திடிற்பின் னென்னை யுளதறிய
பின்ன வுயிர்களில பின்ன விளக்கெனுமத்
தன்னைத் தனிலுணர மின்னுந் தனுளான்ம —
ப்ரகாசமே; அருள் விலாசமே; அக விநாசமே;
இன்ப விகாசமே. (ஐயே) 3

4. கர்ம வினைகளின் கட்டு அவிழவும், பிறவிக்கு காரணமாகிய அகந்தை அழியவும், அனைத்து வழிகளைவிட ஆத்ம விசார வழியே மிகவும் சுலபமானது. எண்ணம், சொல், செயலில் அமைதி ஏற்பட்டு சும்மா இருந்தால் ஆச்சரியமான வகையில் ஆன்ம ஜோதி பிரகாசிக்கிறது. அந்த நிலையில் பயமே இல்லை; என்றும் ஆத்மானுபவம் கிடைக்கிறது. அதுவே இன்பக் கடலாய்த் திகழ்கிறது.

கன்மா திகட்டவிழ சென்மா திநட்டமெழ
வெம்மார்க் கமதனினு மிம்மார்க் கமிக்கெளிது
சொன்மா னததனுவின் கன்மா திசிறிதின்றிச்
சும்மா வமர்ந்திருக்க வம்மா வகத்திலான்ம —
சோதியே; நிதானு பூதியே; இராது பீதியே;
இன்பவம் போதியே. (ஐயே) 4

5. ஆகாயம் முதலான வெளியை விளக்கிக் காட்டும் கண் முதலான பொறிகளுக்கும் கண்ணாகிய, மனமாகிய கண்ணிற்கும் கண்ணாகி அம்மனதிற்கும் மேலான சிதாகாசமாக; வேறு எதையும் எண்ணாது தன்னை உள்ளே நாடும் உள்ளத்தில் ஒளிர்கின்ற அண்ணாமலையைக் காணலாம். அதுவே என் ஆன்மா. அதன் அருளை வேண்டி, அதனிடம் அன்பு பூண்டு இன்பம் தோன்ற அது எப்போதும் விளங்குகிறது.

விண்ணா தியவிளக்குங் கண்ணா தியபொறிக்குங்
கண்ணா மனக்கணுக்குங் கண்ணாய் மனவினுக்கும்
விண்ணா யொருபொருள்வே றெண்ணா திருந்தபடி
யுண்ணா டுளத்தொளிரு மண்ணா மலையெனான்மா —
காணுமே; அருளும் வேணுமே; அன்பு பூணுமே;
இன்பு தோணுமே. (ஐயே) 5

*26-2-46 மாலை:*

*ஸ்ரீ பகவான் 'ஆத்ம வித்தை' எனும் பாடல் எப்படி இயற்றலாயிற்று என்று தெரிவித்தார். "எந்த வித்தையானாலும் எதையாவது அறிவதற்காகவே ஏற்ப்டுகிறது. உள்ளங்கை நெல்லிக்கனி என்ற பிரசித்தி பெற்ற உதாரணத்தை பொய்யாக்குமளவுக்கு அது தெளிவாக இருக்குமானால், முருகனார் சொன்னபடி, ஆத்மவித்தை - அதி சுலபமோ கடினமோ - எதற்கு? அவர் கூறியதின் அர்த்தம் என்னவென்றால் 'அந்த நன்கறிந்த உதாரணத்தில் ஒரு உள்ளங்கை தேவை, அதில் வைத்த நெல்லிக்கனியை உணரக்கூடிய கை, காண்பதற்கு கண், ஏற்கனவே அந்த கனியை பற்றிய அறிவு போன்றவை தேவை. ஆனால் ஆன்மாவை அறிவதற்கு ஆன்மாவைத் தவிர வேறொன்றும் வேண்டியதில்லை.' உதாரணமாக உறக்கத்தில் நம் இருப்பைத் தவிர வேறெதுவும் இருப்பதில்லை. மேலும் தூக்கத்தில் 'நாம் இருந்தோம்' என்பதை ஒப்புக் கொள்கிறோம். விழித்த பின்னர் 'நான் உறங்கினேன்' என்று சொல்கிறோம், தூங்கிய ஒருவனும், இப்போது விழித்திருக்கும் ஒருவனும் என இரண்டு "நான்" இருப்பதாக யாவரும் நம்புவதில்லை. அந்தப் பழமொழியில் கனியை விளங்கச் செய்ய இத்தனையும் வேண்டியுள்ளது. இவையனைத்தும் தானாகிய ஆன்மாவை ஆச்ரயித்து, 'உள்ளங்கை நெல்லிக்கனி' என்ற கனியை விளங்கச் செய்கின்றன. ஆகையால் ஆன்மாவே பிரத்யக்ஷமாக விளங்குவதாக இருக்க வேண்டுமல்லவா! அது எப்படியிருந்தாலும் சரி, முருகனார் பல்லவியும் அனுபல்லவியும் எழுதி விட்டார், சரணம் எழுத வேண்டியிருந்தது. ஏனோ தனக்கு இதற்குமேல் எழுத வரவில்லை என்றும், தன்னால் அந்தப் பாடலை பூர்த்தி செய்யவே முடியாதென்றும், அதனால் என்னை அதை பூர்த்தி செய்யும்படியும் கேட்டுக் கொண்டார். எனவே நான் இதை எழுதினேன். முதலில் ஒரு சரணம்தான் எழுதினேன். ஆனால் முருகனார் குறைந்தது நான்கு சரணங்களாவது வேண்டுமென்றதால் நான் மேலும் மூன்று சரணங்களை எழுதினேன். கடைசியில், அண்ணாமலையைப் பற்றி குறிப்பிடவே இல்லையே என்பது ஞாபகம் வந்தது. அதனால் ஐந்தாவது சரணம் எழுதி, அதில் அண்ணாமலையை குறிப்பிட்டேன். நந்தனார் கதையில் வரும் பாட்டில் 'பொன்னம்பலம்' வருவது போல், இதிலும் 'அண்ணாமலை' இடம் பெற்றுள்ளது."*